Registered as a Newspaper

**BECON**
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)
156/3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
விலங்கியல்
திரு தம்பிராசா, B.Sc.
(சனி - ஞாயிறு)
86 A/L — 12.30
பிறப்புரிமையியல்
87 A/L — 1.30
88 A/L — 2.30

# உதயன்

உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை

விலை ரூ. 1/-

**BECON**
(ஸ்ரீதர் சினிமா முன்பாக)
156/3, ஸ்ரான்லி வீதி,
யாழ்ப்பாணம்.
விலங்கியல்
திரு. தம்பிராசா, B.Sc.
(சனி - ஞாயிறு)
86 A/L — 12.30
பிறப்புரிமையியல்
87 A/L — 1.30
88 A/L — 2.30

மடர்: 1 யாழ்ப்பாணம் குரோதன ஆடு தை மீ௨ 30 புதன்கிழமை ஹிஜ்ரி 1406 ஜமா. ஆகிர் பிறை 2 (12-02-1986) UTHAYAN — A LIVELY TAMIL DAILY கதிர்:-74

# யாழ். குடா நாட்டில் இரவுநேர ஊரடங்கு?

## அரசு தீவிர ஆலோசனை

கொழும்பு, பெப். 12

யாழ்ப்பாணக் குடாநாட்டில் இரவு வேளைகளில் ஊரடங்குச் சட்டம் பிறப்பிக்கப்படக்கூடும்.

பாதுகாப்பு உயர் வட்டாரங்களில் இது சம்பந்தமாக மிகத் தீவிரமாக ஆராயப்பட்டு வருவதாக கொழும்பில் அரசாங்க வட்டாரங்களில் பேசப்படுகிறது.

தமிழ்ப் போராளிகள் பெரும் தாக்குதல் ஒன்றுக்குத் தயாராகின்றார்கள் என்பதைக் கருத்திற்கொண்டே, இரவு வேளைகளில் ஊரடங்குச் சட்டத்தை அமுல் நடத்துவது பற்றி பாதுகாப்பு வட்டாரங்களில் ஆலோசிக்கப்படுகின்றதாம்.

பெரிய இராணுவத் தாக்குதல் ஒன்றை யாழ்ப்பாணத்தில் நடத்த இலங்கை அரசு முஸ்தீபு செய்வதாக தமிழ் ஈழவிடுதலை இயக்கம் அறிவித்ததுடன்,

அப்படி ஒரு தாக்குதல் இடம் பெற்றால் நினைத்துப் பார்க்காத அளவில் எதிர்த்தாக்குதல் நடத்த விடுதலைப் போராளிகளும் தயார் நிலையில் உள்ளனர் என்று எச்சரிக்கையும் விடுத்து இருந்தது தெரிந்ததே.

"பெரிய தாக்குதல் ஒன்றுக்கு விடுதலைப் போராளிகள் தான் முஸ்தீபு செய்கின்றனர். அப்படி ஒரு தாக்குதலுக்குத் திட்டமிட்டு விட்டுத்தான், போராளிகள் அரசாங்கத்தின் மீது இப்படிக் குற்றஞ்சாட்டுவது வழக்கம்'' என்று தேசிய பாதுகாப்பு அமைச்சர் லலித் அத்துலத் முதலி தமது பதிலில் கூறியிருந்தார்.

ஈழ தேசிய விடுதலை முன்னணி, இந்திய அரசாங்கத்திடம் இராணுவ உதவி கோரி இருப்பதாகவும் அமைச்சர் லலித் குற்றம்சாட்டி இருந்தார்.

இவற்றை அடிப்படையாக வைத்தே பாதுகாப்பு வட்டாரங்கள் முன்னோடி நடவடிக்கையாக யாழ் குடாநாட்டில் இரவு வேளை ஊரடங்குச் சட்டத்தை கொண்டு வருவது குறித்து ஆலோசித்து வருவதாக மிகவும் நம்பிக்கையாகத் தெரிய வந்துள்ளது.

### தாய்மார் புதல்வர்களை பார்த்தனர்

யாழ்ப்பாணம், பெப். 12

யாழ் குடாநாட்டு இராணுவ முகாம்களில் தடுப்புக்காவலில் இருக்கும் தமிழ் இளைஞர்களில் 16 பேர்களின் தாய்மார் தமது புதல்வர்களை நேற்றுச் சந்தித்தனர்.

யாழ் அரசாங்க அதிபர் திரு. மு. பஞ்சலிங்கம் செய்து கொடுத்த ஏற்

(4-ஆம் பக்கம் பார்க்க)

முச்சந்திமுரளி



கடலிலே பாதுகாப்பு வலயம், தரையிலே பாதுகாப்பு வலயம், வானத்திலே வலயம் எண்டு ஒரே வலயங்களைப் போட்டு, எங்கடை மக்களை வளைச்சுக் கொள்ளு வினமோ பின்னை...!

கைதானோரை விடுதலை செய்யக்கோரி

## மன்னார் கச்சேரிக்கு பெண்கள் சென்றனர்

யாழ்ப்பாணம், பெப். 12

சில தினங்களுக்கு முன் மன்னாரில் கைது செய்யப்பட்டோரை விடுதலை செய்யக்கோரி தாய்மார்களும் மனைவிமாரும் நேற்று மன்னார் கச்சேரியை முற்றுகையிட்டனர்.

கச்சேரி ஊழியர்கள், தபால் ஊழியர்கள் உட்பட சுமார் 40 பேர் கைதாகி இராணுவ முகாமில் வைக்கப்பட்டுள்ளனர்.

கைதானவர்களை விடுதலை செய்து தரும்படி இவர்கள் மேலதிக அரசாங்க அதிபரைக் கேட்டுக் கொண்டனர்.

மேலதிக அரசாங்க அதிபர் இராணுவமுகாம் பொறுப்பதிகாரியுடன் தொடர்பு கொண்டார்.

விசாரணையின் பின்பு அவர்கள் விடுதலையாவார்கள் என்று அப்போது உறுதி அளிக்கப்பட்டது

## நாவற்குழியில் குண்டு வெடிப்பு துப்பாக்கிச் சூடு

நல்லூர், பெப். 12

நேற்று நாவற்குழிப் பகுதியில் குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்டதால் கைதடி, அரியாலை பகுதிகளில் பெரும் பதற்றம் நிலவியது.

வயலில் வேலை செய்து கொண்டு நின்ற மக்கள் இக்குண்டு வெடிப்பு சத்தங்களினால் பீதி கொண்டு சிதறி ஓடினர்.

சம்பவம் பற்றி தெரிய வருவதாவது:-

நேற்று நண்பகல் சுமார் 12மணி அளவில் நாவற்குழி இராணுவ முகாமில் இருந்து சிருடையினர் முகாமுக்கு முன்னால் உள்ள வயல் வெளிகள் ஊடாகவும் செம்மணி வீதியூடாகவும் வெளியே வந்தனர்.

இதனைத் தொடர்ந்து போராளிகள் சிருடையினரின் வருகையை எதிர்த்து கைக்குண்டுகளை வெடிக்க வைத்தனர்.

சிருடையினர் வயல்வெளிகளில் படுத்திருந்தும், நாவற்குழி உப்புப் பாத்தியினுள்

(4-ஆம் பக்கம் பார்க்க)

## தொண்டாவைக் கைது செய்யக் கோருகிறார் அனுரா

### நூரளை வன்செயலின் சூத்திரதாரியாம்

கொழும்பு, பெப். 12

அமைச்சர் தொண்டமான்தான் மலையக வன்செயல்களின் சூத்திரதாரி. இதற்காக தொண்டமானை அரசாங்கம் கைது செய்ய வேண்டும்.

இப்படி எதிர்க்கட்சித் தலைவர் திரு. அனுரா பண்டாரநாயக்கா குறிப்பிட்டார்.

திரு. அனுரா பண்டாரநாயக்கா மேலும் சொன்னதாவது;

வார இதழ் ஒன்றுக்கு அளித்த பேட்டியொன்றில் "தாக்குதல்தான் சரியான பாதுகாப்பு நடவடிக்கை'' என்று திரு. தொண்டமான் கூறியுள்ளார்.

மலையகத்தில் அண்மையில் ஏற்பட்ட வன்செயல்களுக்கு அரசாங்கம் திரு. தொண்டமானைக் கைது செய்ய வேண்டும்.

சுதந்திரக் கட்சி பதவியில் இருந்தால் திரு. தொண்டமான் கைது செய்யப்பட்டிருப்பார்.

மலையக வன்செயல்கள் எப்படி உருவாகின? அவற்றுக்கும் திரு. தொண்டமானுக்கும் உள்ள தொடர்புகள் என்ன? — இவற்றை எல்லாம் சுதந்திரக் கட்சி நாடாளுமன்றத்தில் வெளியிடப் போகின்றது.

இப்படி திரு அனுரா பண்டாரநாயக்கா சொன்னார்.

### அண்ணனை காணவில்லை தம்பியை கூட்டிச் சென்றனர்

மட்டக்களப்பு, பெப். 12

அண்ணனைத் தேடி வந்த பாதுகாப்புப் படையினர், அண்ணனைக் காணவில்லை என்றவுடன் தம்பியை அழைத்துச் சென்றனர்.

இச் சம்பவம் மட்டக்களப்பில் இடம் பெற்றது.

ஜெயகுமார், தவகுமார் இருவரும் இரட்டையர்கள்.

தவகுமாரைத் தேடிப் பாதுகாப்புப் படையினர் வீட்டுக்குச் சென்றனர். அவர் இல்லை என்று கூறப்பட்டவுடன் தமையனான ஜெயகுமாரை அழைத்துச் சென்றனர்.

தவகுமாரை ஒப்படைத்தால் ஜெயகுமார் விடுவிக்கப்படுவார் என்று பாதுகாப்புப் படையினர் உறவினர்களிடம் கூறிவிட்டுச் சென்றனராம்.

கல்லடி முகாமில் ஜெயகுமார் காவலில் வைக்கப்பட்டுள்ளார்.

### ★ இம்மாதம் கோட்டையில் ஒய்வூதியம்

சுண்டுக்குளி, பெப். 12

இலங்கை வங்கி, கச்சேரிக் கிளையில் ஓய்வூதியம் பெற்று வந்தவர்களுக்கு இம்மாதம் கோட்டை கொடுப்பனவு காரியாலயத்தில் வைத்து ஓய்வூதியம் வழங்கப்படும்.

சிவில் ஓய்வூதியம் பெறுவோர் சகலரும் 15 ஆம் திகதி சனிக்கிழமை ஓய்வூதியம் பெறலாம்.

விதவைகள், அநாதைகள், ஆசிரியர், ஆசிரிய விதவைகள், படைக்கல சேவிதர்கள், படைக்கல சேவிதர்களின் விதவைகள் ஆகியோர் 16 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை ஓய்வூதியம் பெறலாம்.

இந்தக் கொடுப்பனவுகள் யாவும் காலை 9.00 மணியில் இருந்து பிற்பகல் 1.00 மணிவரை வழங்கப்படும்.

## கண்ணிவெடி 6 பொலீஸ் காயம்!

— மட்டக்களப்பு மாவட்டச் செய்தியாளர் —

மட்டக்களப்பு, பெப். 12

கல்குடா-வாழைச்சேனை வீதியில் நேற்றுக்காலை இடம் பெற்ற கண்ணிவெடிச் சம்பவத்தில் 6 பொலிஸார் காயமடைந்தனர்.

பின்னர் நடந்த துப்பாக்கிப் பிரயோகத்தில் சைக்கிளில் சென்று கொண்டிருந்த ஒரு தமிழர் மரணமானார்.

இறந்தவரின் சடலம் வாழைச்சேனை ஆஸ்பத்திரியில் வைக்கப்பட்டிருந்தது. சடலம் அடையாளம் காணப்படவில்லை.

மூதூரில் கைதான

## 42 பெண்களில் இதுவரை எவரும் விடுதலை இல்லை

திருகோணமலை, பெப். 12

மூதூரில் கைதான 42 தமிழ் இளம் பெண்களில் ஒருவரும் இன்னும் விடுவிக்கப்படவில்லை.

இவர்களில் ஓர் இளம் பெண் கடும் சுகயீனத்துடன் மூதூர் ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்டார்.

ஏனைய 41 பேர் மீதும் விசாரணைகள் தொடர்ந்து நடைபெறுகின்றன.

இவர்களில் 12 பேர் நேற்று திருகோணமலை பொலீஸ் நிலையத்துக்கு மேல் விசாரணைக்காக கொண்டு வரப்பட்டனர்.

ஒரு கேள்விக்கு இரு பதில்கள்

# இந்தியாவின் முயற்சிக்கு முழு ஆதரவு

## இராணுவத் தீர்வை நாடோம்; இலங்கை இந்தியாவுக்கு உறுதி

புதுடில்லி, பெப். 11

இனப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு இந்தியா எடுத்து வரும் முயற்சிகளுக்கு இலங்கை அரசாங்கம் பூரண ஆதரவை வழங்கும்.

சம்பந்தப்பட்ட பிரச்சினைக்கு இராணுவத் தீர்வை ஒரு போதும் அது நாடமாட்டாது.

இவ்வாறு இலங்கை அரசு சார்பில் இந்தியாவிடம் உத்தியோகபூர்வமாக அறிவிக்கப்பட்டது.

இந்தியாவில் உள்ள இலங்கைத் தூதுவர் திரு. பேர்னாட் திலகரத்தின வெளியுறவுச் செயலாளர் திரு. ரோமேஷ் பண்டாரியை இன்று சந்தித்து தமது நாட்டு அரசாங்கத்தின் நிலையை விளக்கினார்.

இனப்பிரச்சினையைத் தீர்ப்பதற்கு, இந்தியா எடுத்துவரும் முயற்சிகளில் இலங்கை அரசுக்கு ஆர்வம் இல்லையா? அப்படியானால் அதனை நேரில் எமக்குச் சொல்ல வேண்டும்-என்று பிரதமர் ராஜீவ் காந்தி கடந்த ஞாயிற்றுக்கிழமை. மாலைதீவில் கேள்வி எழுப்பி இருந்தார்.

அதற்குப் பதில் தரும் விதத்திலேயே இலங்கைத் தூதுவர் திரு. பேர்னாட் திலகரத்தின திரு. ரொமேஷ் பண்டாரியைச் சந்தித்து தமது அரசின் நிலைபாட்டைத் தெரிவித்தார். அரசியல் அவதானிகள் இங்கு கருத்துத் தெரிவித்தனர்.

திரு. திலகரத்தின, திரு. பண்டாரியுடன் நேற்று ஒருமணி நேரம் பேச்சுக்கள் நடத்தினர்.

இலங்கை அரசின் வேண்டுகோளின் மீது இச் சந்திப்புக்கு ஏற்பாடு செய்யப்பட்டது.

இருவரும் மீண்டும் சந்திக்க இருப்பதாகவும் தெரிகிறது.

# கடல் பாதுகாப்பு வலய புதிய விதிகள் அமுல்

யாழ்ப்பாணம், பெப். 12

கடல் பாதுகாப்பு வலயத்தின்கீழ் புதிய விதிகள் அமுலுக்கு வர உள்ளன.

அதற்கு இணங்க அதிகார பூர்வமாக வரையறை செய்யப்பட்ட மீன்பிடி வட்டாரத்துக்கு வெளியே பர்மிட் இன்றி காணப்படும் வள்ளங்கள் சந்தேகத்துக்கு உரியவையாகக் கருதப்படும்.

இந்த புதிய விதிகள் வடக்கே பருத்தித்துறை முதல் கிழக்கே மட்டக்களப்புவரை அமுல் செய்யப்படும்.

தமிழ்நாட்டின் வேதாரணியத்தில் இருந்து இலங்கையின் கிழக்குக் கரைக்கு போராளிகளுக்குத் தேவையான ஆயுதங்களும் அத்தியாவசிய பொருள்களும் கடத்தி வரப்படுகின்றன என்று இலங்கை அரசு கருதுவதே புதிய விதிகளுக்கு காரணமாம்.

வலுவான பெரிய மோட்டார்கள் பூட்டப்பட்ட கடுகதிப்படகுகள் மூலம் இவை கடத்தப்படுகின்றன என்று கூறப்படுகிறது.

### பிரார்த்தனை இயக்கம் ஒத்திவைப்பு

நல்லூர், பெப். 12

பாதுகாப்பு வலயங்களை வாபஸ் பெறக் கோரியும், இராணுவ முகாம்களை அகற்றக் கோரியும் நடக்க இருந்த 24 மணிநேர பிரார்த்தனை இயக்கம் நாளை நடைபெற மாட்டாது.

அது சம்பந்தமாக பூரண ஒழுங்குகளைச் செய்வதற்கு மேலும் ஏற்பாடுகள் செய்யப்பட வேண்டி உள்ளன.

அதனால் பிறிதொரு தினத்தில் பிரார்த்தனை இயக்கத்தை நடத்த முடிவு செய்யப்பட்டிருக்கிறது.

இவ்வாறு பிரார்த்தனை இயக்கத்தை நடத்துவதில் மும்முரமாக முனைந்து வரும் பிரமுகர்களில் ஒருவர் உதயனுக்குத் தகவல் தந்தார்.

24 மணிநேர பிரார்த்தனை இயக்கத்துக்கு வட பகுதி மக்கள் மத்தியில் பெரும் ஆதரவு இருக்கிறது. எனினும் அதனைச் சரிவரத் திட்டமிட்டு, பூரண ஏற்பாடுகளைச் செய்வதற்காகவே இந்த மாற்றம் என்றும் அவர் சொன்னார்.

## அடுத்த நடவடிக்கை பற்றி தமிழ் ஈழ ஆதரவாளர் கழகம் முடிவு செய்யும்

திருச்சி, பெப். 11

இலங்கைத் தமிழர் பிரச்சினை குறித்து எடுக்கப்படவுள்ள அடுத்த கட்ட நடவடிக்கை பற்றி தமிழ் ஈழ ஆதரவாளர்கள் கழகம் முடிவு செய்யவுள்ளது.

மாத முடிவில் கழக நடவடிக்கைக் குழு கூடி முடிவு செய்யும் என்று தி. மு. க. தலைவர் மு. கருணாநிதி சொன்னார்.

இதனிடையில் இலங்கைத் தமிழர், மலையகத் தமிழர் படும் இன்னல்களுக்கு அனுதாபம் தெரிவித்து தாயகம் திரும்பியோர் ஐக்கிய முன்னணி உறுப்பினர்கள் நேற்று மதுரையில் உண்ணாவிரதம் இருந்தனர்

### சீனி விலை அதிகரிப்பு

கொழும்பு, பெப். 12

சீனியின் விலை கிலோவுக்கு 45 சதத்தினால் அதிகரிக்கப்பட்டுள்ளது.

இப்பொழுது சீனியின் விலை 1 கிலோ 14 ரூபா.

இனிப் புதிய விலை 1 கிலோ 14.45 சதம்.

### கோட்டையில் இருந்து எவரும் விடுதலை இல்லை

யாழ்ப்பாணம், பெப். 12

யாழ். கோட்டைமுகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளவர்களில் நான்கு பேரை நேற்றுக்காலை விடுவிப்பதாக முன்னர் அறிவிக்கப்பட்டிருந்தது.

அதன்படி யாழ். செயலக அதிகாரி ஒருவர் நேற்றுக்காலை முகாமுக்குச் சென்று இருந்தார்.

ஆனால் சொல்லப்பட்டபடி அவர்கள் விடுவிக்கப்படவில்லை. விடுவிக்கப்படும் புதிய திகதி பின்னர் அறிவிக்கப்படும் என்று கூறப்பட்டதாம்.

### சுபநேரம்

12.2.1986
புதன்கிழமை

சுபநேரம்:
5.04 முதல் 6.34 வரை
ராகுகாலம்;
12.34 முதல் 2.04 வரை
இவை பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்.
சதுர்த்தி விரதம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இளைய தலைமுறையின் இதயம் கவரும் இன்றைய நாளிதழ்

## விஜய்காந்தின் கைகளில் சிலம்பம் விளையாடும்

### நண்பர் சொல்லுகிறார்

நடிகர் விஜய்காந்தின் நெருங்கிய நண்பர் இப்ராகிம். அவரது செயலாளரும் இப்ராகிம் தான்.

இப்ராகிம் சொல்லும் சொல்லை மீறுவதே இல்லை விஜய்காந்த். அப்படி ஒரு அன்பு, பாசம், அரவணைப்பு — இருவரிடையேயும்.

நண்பரைப் பற்றிக் கூறுகிறார் இப்ராகிம்!

''விஜய்காந்தும் நானும் மதுரையில் ஒரே பள்ளியில் படித்தோம். இருவரும் ஒரே ஆசிரியரிடம் தான் டியூசனுக்கும் போனோம்.

டியூசனுக்குச் செல்லும்போது இருவரும் சேர்ந்துதான் போவோம்.

அன்று இணைந்த நாங்கள் இன்னும் பிரியாமல் சேர்ந்தே இருக்கிறோம்.

அன்று எங்களுக்குள் ஏற்பட்ட நட்பு ஆண்டவன் அருளால் இறுகிக் கிடக்கிறது.

மதுரையில் விஜய்காந்திற்குப் பெரிய நண்பர்கள் படை உண்டு. அதற்கு அவர் தளபதி. தளபதிக்கு உதவியாளன் நான்.

மதுரை மேல ஆவணி வீதியில் நாங்கள் வைத்ததுதான் சட்டம்!

ஏதாவது தகராறு, சண்டை என்றால் எங்கள் வீரதளபதி அங்கே நிற்பார். சிலம்பம் கையில் விளையாடும்

அவரது அஞ்சா நெஞ்சம் பல துணிச்சலான போராட்டங்களையும் கலகங்களையும் சந்தித்து இருக்கிறது.

அன்று ''டேய் இப்ராகிம்'' என்று அழைத்த விஜய் இன்னும் அப்படித்தான் என்னை அழைக்கிறார்.

அவரது புகழையும், வெற்றிகளையும் கண்டு பூரிப்பில் திளைத்து வருகிறேன் என்கிறார் அவர்.

தினசரி சினிமா

## பாரதத்திலிருந்து

## பாப்பரசர் ரோமுக்கு வந்து சேர்ந்தார்

புதுடில்லி, பெப். 11

புனித பாப்பரசர் ஜோன் போல் தனது பாரத விஜயத்தை முடித்துக் கொண்டு ரோமாபுரிக்கு திரும்பிவிட்டார்.

கல்கத்தாவில் நடந்த நிகழ்ச்சிகளில் பாப்பரசருக்கு எதிரான சுலோகங்கள் தீவிர மதவாதிகளால் எழுப்பப்பட்டது.

எனினும் அவரது இறுதி நிகழ்ச்சியான பூனா விஜயத்தில் பல மதத்தைச் சேர்ந்தவர்களும் அவருக்கு அன்பான வரவேற்பு அளித்தனர்.

இது பாப்பரசருக்கு பெருமகிழ்ச்சியைக் கொடுத்ததாகக் கூறப்படுகிறது.

# வளைகுடாவில் போர் உக்கிரம்

### ஈராக்கின் டாங்கிகளை ஈரான் துவம்சம்

தெஹ்ரான், பெப். 11

வளைகுடாவில் போர் உக்கிரமடைந்துள்ளது.

ஈரானும் ஈராக்கும் கடும் சண்டையில் ஈடுபட்டுள்ளன.

சட் அரபா பகுதிகளின் நீர்வழிப்பாதையில் இந்த சண்டைகள் மூண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

ஈராக்கின் பல யுத்த டாங்கிகளை ஈரான் துவம்சம் செய்துவிட்டதாக அறிவித்துள்ளது.

பாஸ்ரா துறைமுகப் பகுதிகளும் ஈரானின் பலத்த தாக்குதல்களுக்கு இலக்காகியதை ஈராக் ஒப்புக்கொண்டுள்ளது.

ஈரானில் மன்னர் ஷாவின் ஆட்சிக்கு முடிவு கட்டி அயத்தொல்லா கொமெய்னி ஆட்சிக்கு வந்த 7வது ஆண்டை ஈரான் கொண்டாடுகிறது.

இதன் ஒரு கட்டமாகவே இந்த தாக்குதல் திட்டத்தை ஈரான் மேற்கொண்டிருக்க வேண்டுமென பி. பி. சி. செய்தி விமர்சனங்களில் தெரிவிக்கப்பட்டது.

## சண்டிகாரில்

## சட்டம் ஒழுங்கு மதிப்பீட்டு ஆய்வு

### பஞ்சாப் முதலமைச்சர் பர்னாலா ஏற்பாடு

சண்டிகார் பெப். 11

பஞ்சாப் முதலமைச்சர் சுர்ஜித்சிங் பர்னாலா சட்டம், ஒழுங்கு பற்றிய மதிப்பீட்டு ஆய்வுக்கான கூட்டம் ஒன்றை ஏற்பாடு செய்துள்ளார்.

இக்கூட்டத்தில் சட்டம், ஒழுங்கு துறை சார்ந்த அதிகாரிகளும் மற்றும் பொலீஸ் பிரிவின் உயர் அதிகாரிகளும் கலந்து கொண்டனர்.

பஞ்சாப் அரசுக்கு தீவிரவாதிகளால் ஏற்பட்டு வரும் அச்சுறுத்தல் பற்றிய விடயங்களும் இதில் ஆராயப்படும்.

இப்பொழுது அங்கு இடம் பெற்று வரும் வன்முறைகள் காரணமாக தேசிய பாதுகாப்புச் சட்டம் இன்னும் 3 மாதத்துக்கு அமுலில் இருக்குமெனவும் தெரிவிக்கப்பட்டது.

## கல்கத்தாவில்

## விலைவாசி எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

### பொலீஸார் தடியடி

கல்கத்தா, பெப். 11

கல்கத்தா எஸ்பிளனேட்டில் நடந்த ஆர்ப்பாட்டத்தில் பொலீஸார் பலரைக் கைது செய்துள்ளனர்.

பாரதீய ஜனதாக்கட்சி ஏற்பாடு செய்திருந்த இந்தஅரசெதிர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் 250 தொண்டர்கள் கலந்து கொண்டதாகத் தெரிவிக்கப்படுகிறது.

பொலீஸார் தடியடிப் பிரயோகம் செய்ததுடன் ஆர்ப்பாட்டக்காரர்களின் முன்னணித் தலைவர்களையும் கைது செய்துள்ளனர்.

விலைவாசி உயர்வைக் கண்டித்தே இந்த அரசு எதிர்ப்பு நிகழ்ச்சி ஏற்பாடு செய்யப்பட்டது.

## இலங்கையின்

# இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வு

### இதுதான் அமெரிக்காவின் விருப்பமென்கிறார் பகத்

புதுடில்லி, பெப். 11

இலங்கையின் இனப் பிரச்சினைக்கு அரசியல் தீர்வுகாண வேண்டும்— இதுதான் அமெரிக்காவின் கொள்கையும் விருப்பமுமாகும்.

இவ்வாறு பாரத வெளியுறவு அமைச்சர் பி. ஆர் பகத் தெரிவித்தார்.

அமெரிக்க — இந்திய கூட்டுக் கொமிஷன் கூட்டத்தில் பங்குகொள்ள திரு. பகத் அமெரிக்கா சென்றிருந்தார்.

தனது அமெரிக்க பயணத்தை முடித்துக் கொண்டு பாரதம் திரும்பியுள்ள திரு. பகத் இந்திய வானொலியின் விசேட செய்தியாளருக்கு அளித்த பேட்டியிலேயே மேற்கண்டவாறு தெரிவித்திருக்கிறார்.

பகத்தின் பயணம் பற்றி செய்தியாளர் மேலும் கேட்டபொழுது பாரதத்துடன் அமெரிக்கா பலவழிகளிலும் ஒத்துழைப்பதற்கு இணங்கியுள்ளது.

பாகிஸ்தானுக்கு அமெரிக்கா ஆயுதங்களையும் வெடிமருந்து போன்றவற்றையும் விற்பது இப்பிராந்தியங்களில் இருக்கக்கூடிய சமநிலையைப் பாதிக்கும்.

இந்த விடயத்தை நான் அமெரிக்காவுக்குத் தெளிவாக எடுத்துக்கூறியுள்ளேன் எனத் தெரிவித்துள்ளார்.

## வெளி உலகில்

## 3 தினங்களில்

# பிலிப்பீன்ஸ் தேர்தல் முடிவுகள் தெரியும்

### தேசிய சபை ஆராய்கிறது

மணிலா, பெப். 11

பிலிப்பீன்ஸ் ஜனாதிபதி யார் என்பது இன்னும் 3 தினங்களுக்குள் தெரியவந்துவிடும் எனத் தெரிவிக்கப்படுகிறது.

வாக்குகளை எண்ணுவதில் ஏற்பட்ட தடங்கல்கள் பற்றி ஏற்கனவே அறிவிக்கப்பட்டிருந்தது

தேர்தல் முடிவை அறிவிப்பது தொடர்பாக தேசிய சபை கூடி ஆராய்ந்தது.

தொடர்ந்து இதுபற்றி ஆராய்ந்தபின் முடிவுகள் வெகு விரைவில் வெளியிடப்படுமென அறிவிக்கப்படுகிறது.

ஜனாதிபதி பேர்டினன்ட் மார்க்கோஸ் முன்னணியில் நிற்பதாக சில செய்திகளும் திருமதி. அக்கியூனோதான் முன்னணியில நிற்பதாக வேறு சில செய்திகளும் தெரிவித்துள்ளன.

என்ன இருப்பினும் தேர்தல் முடிவுகளை வெளியிடுவதில் அரசு காட்டும் தாமதம் பல சந்தேகங்களை கிளப்பியுள்ளதாக பி. பி. சி. செய்தியில் தெரிவிக்கப்பட்டது.

இதற்கிடையில் பிலிப்பீன்ஸ் ஒரு வன்முறைக்களமாக மாறக்கூடிய அறிகுறிகள் தென்படுவதாகவும் கூறப்படுகிறது.

ஏற்றதான அரசொன்றை அமைப்பதற்கு இரு வேட்பாளர்களும் இணக்கத்தன்மையுடன் நடந்து கொள்ள வேண்டுமென அமெரிக்கா கேட்டுக் கொண்டுள்ளது.

---

## மக்கள் முகம்

### சேவை நலன் பாராட்டு விழா

யாழ்ப்பாணம், பெப் 12

வண்ணார்பண்ணை இளையதம்பி வித்தியாலயத்தில் உபஅதிபராகப் பணியாற்றி ஓய்வு பெற்ற திருமதி பொ. சதாசிவத்தின் சேவை நலன் பாராட்டு விழா அண்மையில் நடைபெற்றது.

அதிபர் திரு. கா. கணேசநாதன் தலைமை வகித்தார்.

அறிவு புகட்டுவதைத் தானமாகக் கருதிப் பணியாற்றியவர் திருமதி சதாசிவம் என்று அதிபர் தனது உரையில் சொன்னார்.

### உத்தியோகத்தர்

யாழ்ப்பாணம், பெ. 12

உடுவில் கல்வி அபிவிருத்தி கழகத்தின்நடப்பு வருட உத்தியோகத்தர்களாகப் பின்வருவோர் தெரிவு செய்யப் பட்டனர்.

தலைவர்— திரு. பி எஸ். குமாரசாமி, உப தலைவர்— திருமதி பி. சச்சிதானந்தம், செயலாளர்— திரு. வி. எஸ் சிவபாலசிங்கம், உப செயலாளர்— திரு. வி. யோகீஸ்வரன், பொருளாளர்— திரு த. நடராசா, செயற்குழு உறுப்பினர்கள்— திரு. எஸ். சண்முகலிங்கம், திரு. வி. மரியதாஸ், திரு. எஸ். எம். மூர்த்தி, திரு. எஸ் தியாகராசா, பண்டிதர் திரு இராசையா.

## கடின உழைப்பால் எவரும் உயர்ச்சி பெறலாம்

### பாராட்டு விழாவில் உரை

கொடிகாமம், பெப். 12

கடின உழைப்பினால் எவரும் உயர்ச்சி பெறலாம் என்பதற்கு இன்று பாராட்டுப்பெறும் உத்தியோகத்தர் திரு. சுந்தரலிங்கம் தக்க சான்று ஆவார்.

விவசாய உத்தியோகத்தராகவிருந்து தமது விடாமுயற்சியால் கற்று பட்டதாரியாகி ஆசிரிய சேவைக்குச் செல்லும் திரு. கே. சுந்தரலிங்கத்தைப் பாராட்டும் வைபவத்தில் பேசும்போது யாழ். கமத்தொழிற்சேவை உதவி ஆணையாளர் திரு. கே. பரமலிங்கம் இவ்வாறு கூறினார்.

மீசாலை வடக்கு சாவகச்சேரி கமநலசேவை அலுவலகத்தில் பெரும்பாக உத்தியோகத்தர் திரு. சோ. பரமசிவராசா தலைமையில் இவ் வைபவம் நடைபெற்றது.

## கைதடியில் களவு போன பொருள் மீட்பு

கைதடி, பெப். 12

கைதடி, முத்துக்குமாரசாமி மகாவித்தியாலயத்தில் பல ஆயிரக் கணக்கான தளபாடங்கள் மர்மமான முறையில் மறைந்தன.

எனினும் இளைஞர்களின் துரித நடவடிக்கையால் இக்களவு கண்டுபிடிக்கப்பட்டு உபகரணங்கள் மீட்கப்பட்டன.

## கரவெட்டியில் சட்ட விரோத மின் இணைப்பு துண்டிப்பு

கரவெட்டி, பெப். 12

கரவெட்டிப் பகுதியில் சட்ட விரோத மின் பாவனை வெற்றிகரமாக ஒழித்துக் கட்டப்பட்டு வருகிறது.

கரவெட்டிப் பகுதியில் சில தினங்களுக்கு முன் ஒரு லொறியில் வந்த சிலர், சுமார் 250க்கு மேற்பட்ட வீடுகளில் சட்டவிரோத மின்சாரத்தைத் துண்டித்தனர்.

சட்டவிரோத மின்சார வயர்களைக் கொக்கைத் தடிகளால் அவர்கள் அறுத்துக்கொண்டு சென்றனர்.

இந்தச் சம்பவம் இரவு 7-00 மணியளவில் நடந்தது.

இதேபோன்று சைக்கிள்களில் வந்த இளைஞர்களும் சமீபத்தில் சட்டவிரோத மின்சார வயர்களை அறுத்துக்கொண்டு சென்றனர். இந்த நடவடிக்கை தொடரும் என்றும் அறிவிக்கப்பட்டுள்ளது.

### நவா மினி (உஷா மினி முன்பாக)

**CHURCHILL's LEOPARDS**



புதிய படபோஸ்ரர்கள் படக்கொப்பிகள் விற்பனைக்கு. வாடகைக்கு பெற்றுக் கொள்ளலாம்.

## பூநகரி

### இராணுவ முகாம் பலப்படுத்தப்பட்டது

யாழ்ப்பாணம், பெப். 12

பூநகரி இராணுவ முகாம் பலப்படுத்தப்பட்டுள்ளது.

பனை மரங்களைக் கொண்டு முகாம் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இதற்காக தனியார் காணிகளில் உள்ள பனை மரங்கள் தறிக்கப்பட்டன.

## மாநிலம் - மாவட்டம் - உள்ளூர்

# இரவு நேரத் தடையால் பூநகரி விவசாயிகள் பாதிப்பு

யாழ்ப்பாணம், பெப். 12

இரவு நேரத் தடை உத்தரவால் பூநகரி விவசாயிகள் பெரிதும் கஷ்டம் அடைகின்றனர்.

பூநகரி இராணுவ முகாம்கள் முன்னுள்ள பிரதான வீதிகள் இரவுவேளைகளில் வாகனப் போக்குவரத்துக்குத் தடை செய்யப்பட்டுள்ளன.

மாலை 6 மணி முதல் மறுநாட்காலை 6 மணி வரை இத்தடை உத்தரவு அமுலில் இருக்கின்றது.

மக்கள் அவ்வேளைகளில் நடந்துகூடச்செல்ல முடியாது உள்ளது. அப்படிப் போனவர்கள் எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

ஒருநாள் மாலை 6-30 மணிக்கு அவ்வீதி வழியால் வந்த பூநகரி கூட்டுறவுச் சங்க லொறி ஒன்று ஆயுதப்படையினரால் வழிமறிக்கப்பட்டது.

பின்னர் பலத்த எச்சரிக்கையுடன் லொறியில் இருந்தவர்கள் விடுவிக்கப்பட்டனர்.

இப்போது அறுவடைக் காலம். இத்தடை உத்தரவால் விவசாயிகள் நீண்டதூரம் நடந்து போகவேண்டிய நிலை ஏற்பட்டுள்ளது.

## பனம் பொருள் ஆராய்ச்சி நிலைய அங்குரார்ப்பண வைபவம்

கைதடி, பெப். 12

பனம் பொருள் ஆராய்ச்சி நிலையமும், காரியாலயமும் அமைப்பதற்கான அங்குரார்ப்பண வைபவம் அண்மையில் கைதடி—கண்டி வீதியில் நடைபெற்றது.

பனம் பொருள் அபிவிருத்திச்சபைத் தலைவர் திரு. க. நடராசா வைபவத்தை நடத்தினார்.

கலாநிதி மோகனதாஸ், சமக்கன் லிமிட்டெட் திரு. உருத்திரலிங்கம், மற்றும் சபை உறுப்பினர்கள், விற்பனை பிரதிநிதிகள் வைபவத்தில் கலந்து கொண்டனர்.

சுமார் இருபத்தைந்து லட்சம் ரூபா செலவில் இக்கட்டடம் அமைக்கப்படவுள்ளது.

இக்கட்டடம் இருமாடிகளைக் கொண்டதாக அமையும்.

கட்டட வேலை ஒன்பது மாதத்தில் பூர்த்தி செய்யப்படவுள்ளது.

கட்டட அமைப்பு சமக்கன் லிமிட்டெட் ஸ்தாபனத்தாரிடமும் கட்டட ஆலோசனை கட்டடக் கலைஞர் திரு. எஸ். துரைராசா விடமும் ஒப்படைக்கப்பட்டுள்ளன.

## உசன், மிருசுவில் கிராமங்கள் இருளில் மூழ்கும் நிலை

யாழ்ப்பாணம், பெப். 12

சட்டவிரோத மின் பாவனையால் உசன், மிருசுவில் கிராமங்கள் இருளில் மூழ்கக் கூடிய நிலை ஏற்பட்டுள்ளது.

இப்படி உசன் சமாதானசபை தீர்மானம் ஒன்றை நிறைவேற்றியுள்ளது.

இருளில் மூழ்கும் நிலைமை ஏற்படாது இருக்க ஒழுங்கற்ற மின் பாவனையைத் தடுக்க உசன் சமாதானசபை நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என்று, சபைக்கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

### கட்டட வேலை

விசுவமடு., பெப். 12

புங்குடுதீவு மடத்துவெளி வீரகத்தி விநாயகர் கோயில் கட்டட வேலை புதிய நிர்வாக சபையினால் வெகு துரிதமாக நடைபெறுகிறது.

புங்குடுதீவு வர்த்தக பிரமுகர்களும் பொதுமக்களும் ஆலயத்தைக் கட்டி எழுப்ப பண உதவி வழங்கி வருகிறார்கள்.

## பெண் கைதிகள் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, பெப். 12

இலங்கையில் பெண் கைதிகளின் எண்ணிக்கை இரண்டு மடங்காக அதிகரித்துள்ளது.

1984 ஆம் ஆண்டிலும் பார்க்க 1985 ஆம் ஆண்டில் இந்த எண்ணிக்கை இரட்டிப்பாகியுள்ளது.

## முதலுதவிக் குழு சுகாதார பிரிவு இணையும்

யாழ்ப்பாணம், பெப். 12

கோண்டாவில் பிரிவு பரியோவான் முதலுதவிக்குழுவும் ஆரம்ப சுகாதாரப் பிரிவும் இணைந்து செயல்படத் தீர்மானித்துள்ளன.

கடந்த ஞாயிறு பிற்பகல் நடந்த கூட்டத்தில் இத்தீர்மானம் மேற்கொள்ளப்பட்டது.

கோண்டாவில் பிரிவு அத்தியட்சகர் திரு. இ. சந்திரதாஸ் பேசுகையில், இன்றைய நாட்டு நிலைமையில் முதலுதவியின் அவசியம் இன்றியமையாதது என்று சுட்டிக் காட்டினார்.

ஆரம்ப சுகாதாரப் பிரிவுத் தலைவி திருமதி விநாயகமூர்த்தியும் உரையாற்றினார்.

## ஊரதீவு கேரதீவு வழியாக பஸ்

யாழ்ப்பாணம், பெப். 12

புங்குடுதீவு, ஊரதீவு, கேரதீவு, இறுப்பிட்டி வீதியால் பஸ் சேவை ஒன்றை தீவுப்பகுதி தனியார் போக்குவரத்துச் சங்கத்தினர் ஏற்பாடு செய்துள்ளனர்.

ஊரதீவு கிராம அபிவிருத்திச் சங்கம், மடத்து வெளி சன சமூக நிலையம், இறுப்பிட்டி, ஐங்கரன் சன சமூகநிலையம், ஊரதீவு சனசமூக நிலையம், புங்குடுதீவு இளந்தமிழ் மன்றம், ஊரதீவு மாதர் கழகம், சிவலம்பிட்டி சன சமூக நிலையம், புங்குடுதீவு பாணாவிடை சிவன் தேவஸ்தானம் என்பன கூட்டாகவிடுத்த வேண்டுகோளை ஏற்று தனியார் போக்குவரத்துச் சங்கம் இச் சேவையை ஒழுங்கு செய்துள்ளது.

### தேவை

கொக்குவில், நல்லூர், திருநெல்வேலிப் பகுதியில் சகல வசதியுமுள்ள வீடு வாடகைக்குத் தேவை. தொடர்பு: S. விஸ்வகாந்தன், 268|5, நாவலர் ரோட், ஆனைப் பந்தி, யாழ்ப்பாணம்.

**PATRICIAN**
Institute of Higher Studies
**COMPUTOR**
Programming Course
FOR
**PROFESSIONALS AND SCHOOL LEAVERS**
(6 MONTHS WEEK-END COURSES)
Lectures by
**MR. N. S. RAJAH**
B.Sc. (Eng.) Hons. Lond., A.M.I.C.E., M.C.S.
கட்டடப் படம் வரைதல் (Draftsmanship Course) | 6 மாத காலப் பயிற்சி (ஆங்கிலம்)
Lectures by
**MR. C. DURAIRAJAH**
Hnd. U.K. I.Q.S. Part I

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

### உதய சங்கற்பம்

'அன்பு' தான் உலகை நிலைத்து நிற்கும். மனித வாழ்வு அன்பின் அடிப்படையில்தான் இயங்குகிறது. அன்பே சிவம். அன்பினால் உலகை ஆளலாம்.

—குன்றக்குடி அடிகளார்

உதயன்
உண்மை - அஞ்சாமை - நடுநிலைமை
இல: 15, 2வது ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 24805, 22073
12-02-86 த. பெ. 23

## பேரினவாதமும் தமிழர் சுயாட்சியும்

சிறிலங்கா சுதந்திரக் கட்சித் தலைவி திருமதி சிறிமாவோ பண்டாரநாயக்கா திரும்பவும் ஓலம் எழுப்பியுள்ளார்.

எதிர்க்கட்சி என்றால் அரசாங்கம் செய்யும் நல்லது கெட்டது எல்லாவற்றையும் எதிர்த்தே ஆகவேண்டும் என்ற கோட்பாட்டுடன் எழுந்ததே அந்த ஓலம்.

நாட்டின் மூன்றில் ஒரு பகுதி பறிபோய் விட்டது. மலையகத் தமிழருக்கு இலங்கைக் குடியுரிமை வழங்கப்பட்டது அதற்கு முதல் காரணம். கிழக்கில் இருந்த குடியேற்றத் திட்டங்களில் இருந்து சிங்களமக்கள் வெளியேறிவிட்டது இரண்டாவது காரணம். இந்த இரண்டு காரணிகளாலும் நாட்டில் மூன்றில் ஒருபகுதி தமிழர்வசம் பறிபோய் விட்டது என்ற அர்த்தப்பட திருமதி பண்டாரநாயக்கா கருத்து வெளியிட்டிருக்கிறார்.

திருமதி பண்டாரநாயக்கா இலங்கை நாட்டின் முன்னாள் பிரதமர்.

இப்போது சர்வ வல்லமையும் ஜனாதிபதிக்கு இருப்பதுபோன்று, அப்போது பிரதமருக்குத்தான் சர்வ வல்லமையும் இருந்தது.

கடந்த ஏழு வருடங்களாகக் குடியியல் உரிமை பறிக்கப்பட்டிருந்து சுமார் ஒன்றரை மாதங்களுக்கு முன்னரே சிறிமாவோவுக்கு அந்த உரிமை வழங்கப்பட்டது. அதனால் அவர் நாட்டின் அதிஉயர் தலைவியாக மீண்டும் வருவதற்கு முயற்சித்துக்கொண்டிருக்கிறார்.

அதற்காக அரசியல் லாபம் தேடவேண்டியது அவருக்குக் கட்டாய தேவையாகிவிட்டது. அதனால் அரசாங்கத்தின் நடவடிக்கைகளை எதிர்க்கவேண்டும் என்று அவர் நினைத்திருக்கலாம்.

எதிர்க்கட்சியில் இருந்தால் அரசாங்கத்தின் செயற்பாடு ஒவ்வொன்றையும் எதிர்க்க வேண்டும் என்பதுதான் இலங்கையின் அரசியல் இயல்பும், ஜனநாயக சித்தாந்தமும்!

அதனையே திருமதி பண்டாரநாயக்காவும் பின்பற்றுகிறார். அவருக்குத் தலைமைப் பதவி கிடைத்தால் நாட்டு மக்கள் எல்லோரும் தமக்குச் சமமதிப்புள்ள பிரஜைகளாக இருக்கவேண்டியவர்கள். சிங்கள, தமிழ், முஸ்லிம் பேதம் காட்டக்கூடாது என்று அவர் கருதவில்லை. தாம் சிங்கள மக்களுக்கு மட்டுமே தலைவியாக இருக்கவேண்டும் என்று இப்போதே நினைக்கிறார்.

மலைநாட்டுத் தமிழர் இலங்கைப் பொருளாதாரத்தின் முதுகெலும்பு. பனி என்றும் வெய்யில் என்றும் பாராமல் அவர்கள் பாடுபட்டு உழைப்பதால்தான் இந்த நாடு இயங்குகிறது. அவர்களுக்குக் குடியுரிமை வழங்கப்பட்டது சிறிமாவோவுக்குப் பொறுக்கவில்லை. மலைநாட்டின் ஒரு பகுதி அவர்களுக்குப் பறிபோய் விட்டதாக அவலக்குரல் எழுப்புகிறார்.

இருபத்திரண்டு வருடங்களுக்கு முன்னர் இலங்கை — இந்திய ஒப்பந்தத்தில் பேனை பிடித்துக் கையொப்பம் இட்டவர் சிறிமாவோ. மலையகத் தமிழர்கள் இந்த நாட்டுப் பிரஜைகளாக வந்தால், அவர்களுக்கு நிலம் சொந்தமாக வரமாட்டாது. அவர்களை ஆகாயத்தில் தொங்க விடலாம் என்று எண்ணித்தான் அப்போது அவர் ஒப்பந்தத்தில் ஒப்பமிட்டாரோ!

இந்த நாடு சிங்கள மக்களுக்கு மட்டும் தான் சொந்தம், மற்ற இனங்களுக்கு இந்த நாட்டு நிலம் சொந்தமாகக் கூடாது என்ற தீவிரவாதம் — இனவாதம் அவரது பேச்சில் தொனிக்கிறது.

இதே போல, கிழக்கு மாகாணத்தில் குடியேற்றப்பட்ட சிங்கள மக்கள் வெளியேற்றப்பட்டு விட்டதாகவும் சிறிமாவோ கவலைப்படுகிறார். அவரது கவலை ஒரு விஷயத்தைத் தெளிவுபடுத்துகிறது. கிழக்கு மாகாணத்தில் — தமிழ் மண்ணில் சிங்கள மக்கள் குடியேற்றப்பட்டார்கள் என்பதை சிறிமாவோவின் பேச்சு ஊர்ஜிதப்படுத்துகிறது.

குடியேற்றம் என்ற பேரில் தமிழ் மக்களின் மண் பறிக்கப்படலாம். ஆனால் எக்காரணம் கொண்டும் சிங்கள மக்களின் மண் பறிபோகக் கூடாது என்ற ஓரவஞ்சகத்தனமான பேரினவாதமும் சிறிமாவோவின் பேச்சில் பளிச்சிடுகிறது.

தாம் ஒரு தேசியத் தலைவர் பதவியை எதிர்நோக்கி இருப்பதாக எண்ணியிருந்தால் சிறிமாவோ இப்படிப் பேசியிருக்க மாட்டார். குறுகிய அரசியல் வட்டத்தில் இருக்கவே அவர் விரும்புகிறார் போலும். பதவியில் உள்ள அரசாங்கத் தலைவர்களைவிட இவ்விஷயத்தில் இவர் ஒருபடி உயர்ந்து நிற்கிறார்.

பெரும்பான்மைச் சமூகத்தைச் சேர்ந்த தலைவர்கள் எல்லோருமே பேரினவாதிகளாக இருக்கும்போது, தமிழ் மக்கள் தமக்கெனத் தலைவரைத் தெரிவு செய்வதற்காகச் சுயாட்சி கேட்பதில் என்ன தவறு?

# தெல்லிப்பளையில் ஒருங்கிணைந்த சுகாதார திட்டம்

## 5 கிராமங்களில் அமுல்

பலாலி, பெப் 12

தெல்லிப்பளை பெரும்பாகச் சுகாதார நிலையம் 1986ஆம் ஆண்டின் கிராமிய ஒருங்கிணைந்த சுகாதாரத் திட்டத்திற்காக ஐந்து கிராமங்களைத் தேர்ந்தெடுத்துள்ளது.

தெரிவு செய்யப்பட்ட ஐந்து கிராமங்களிலிருந்து முக்கியமானவர்களை அழைத்து நேற்று 11ந் திகதி காலை 8.30 மணிக்கு தெல்லிப்பளை அரசினர் வைத்தியசாலையில் ஒரு கலந்துரையாடல் நடைபெற்றது.

இதற்காக அவ்வப் பகுதி பாடசாலை அதிபர்கள், கிராமசேவையாளர்கள், கிராமமுன்னேற்றச் சங்கத்தலைவர்கள், சனசமூக நிலையத் தலைவர்கள், உதவி அரசாங்க அதிபர் ஆகியோருக்கு அழைப்புகள் அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

இலங்கைக் குடும்பத் திட்டச் சங்கத்தின் அனுசரணையுடன் நடத்தப்படவுள்ள இத்திட்டத்துக்காக தெரிவுசெய்யப்பட்ட கிராமங்கள் வருமாறு:-

1. கும்பமலை அளவெட்டி பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவு
2. கோட்டைக்காடு ஏழாலை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவு
3. சித்தியம்புளியடி தெல்லிப்பளை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவு.
4. மத்தலோடை ஏழாலை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவு
5. தையிட்டி காங்கேசன்துறை பொதுச் சுகாதாரப் பரிசோதகர் பிரிவு

இத்திட்டங்களுக்கென இவ்வருடம் 56 ஆயிரம் ரூபா ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது குறிப்பிடத்தக்கது.

### வடமராட்சியில் பண்டித வகுப்புகள்

யாழ்ப்பாணம், பெப். 12

உடுப்பிட்டி கல்விவள நிலையம் வடமராட்சி கல்வி நலன் கருதி பண்டித வகுப்புகளை நடத்த உள்ளது.

கரவெட்டி விக்னேஸ்வரா கல்லூரி அதிபர் திரு. க. சிவபாதசுந்தரம் இதற்கான பொறுப்பை ஏற்றுள்ளார்

உடுப்பிட்டி கல்வி வட்டார பாடசாலை அதிபர்களின் கூட்டத்தில் இத்தீர்மானம் எடுக்கப்பட்டது.

## திருவள்ளுவர் மகாசபையின் சேவை இன்றியமையாதது

### புலமைப்பரிசில் வைபவத்தில் உரை

சுன்னாகம், பெப். 12

"போலிக்கௌரவங்களுக்கு மதிப்பளிக்காமல் தூய உள்ளத்துடன் - மக்களுக்கு சேவை செய்யும் எந்த ஸ்தாபனமும் சமுதாயத்திலிருந்து ஒதுங்குவதில்லை. ஏழை மக்களுக்கு புலமைப் பரிசில் வழங்கும் தலைசிறந்த கைங்கரியத்தைச் செய்யும் அகில இலங்கை திருவள்ளுவர் மகா சபையின் சேவை இன்றைய கால கட்டத்தில் இன்றியமையாததாகும்.

சுன்னாகத்தில்நடைபெற்ற அகில இலங்கை திருவள்ளுவர் மகா சபையின் ஏழை மாணவர்க்கு புலமைப் பரிசில் வழங்கும் வைபவத்துக்கு தலைமை வகித்துப் பேசுகையில் சட்டத்தரணி, பூதப்பிள்ளை. சதாசிவரத்தினம் இவ்வாறு குறிப்பிட்டார்.

கல்விச் செல்வம் எவராலும் அழிக்கப்பட முடியாதது. அதனால் தான் தமிழ்மக்கள் துன்புறுத்தல்களுக்குள்ளாகி இருக்கும் இன்றும் ஏழை மாணவர்களுக்கு கல்விச் செல்வத்தை வழங்க மகா சபை எடுத்துவரும் முயற்சிகள் பாராட்டப்படவேண்டியவையே" என சுன்னாகம் பங்குத் தந்தை வண. மைக்கல் அடிகளார் குறிப்பிட்டார்.

ஏழை மாணவர்களுக்கு உதவும் உயரிய பணியினைச் செய்யும் நீங்கள் இப்பகுதியில் உள்ள ஏனைய ஸ்தாபனங்களுக்கு முன்மாதிரியாக விளங்குகிறீர்கள். அரசாங்கம் இலவச பாடப்புத்தகங்கள் வழங்குவதற்கு முன்பிருந்தே உங்கள் சபை இலவச பாடப்புத்தகங்களை ஏழை மாணவர்களுக்கு வழங்கியது ஒரு சாதனையே' என்று சுன்னாகம் பலநோக்கு கூட்டுறவுச் சங்க தலைவர் திரு. என். குமாரவேலு குறிப்பிட்டார்.

இவ்விழாவில் சபையின் சிறப்பு அமைப்பாளர் திரு. தணிகாசலம்- ஆசிரியர் திரு. சிவதாசன் திரு. குலசிங்கம், அரச அளவையாளர் திரு. வே. ஞானரத்தினம் உட்பட பலர் உரையாற்றினர்.

பரிசில்களை பங்குத் தந்தை வண. மைக்கல் அடிகளார் வழங்கினர்.

### பொய்யாமொழி



**குறள்:**

**அன்புஈனும் ஆர்வம் உடைமை அது ஈனும்
நண்பென்னும் நாடாச் சிறப்பு.**

**பொருள்:**

அன்பு, பிறரிடம் விருப்பம் உடையவராக வாழும் தன்மையைத் தரும்; அஃது எல்லாரிடத்திலும் நட்பு என்று சொல்லப்படும் அளவற்ற சிறப்பைத் தரும்.

# பெருமையை உணர்த்தும் பஞ்சமுக விநாயகர்

## மானிப்பாய் மருதடி ஆலயத்தில் இன்று நடைபெறும் கால்கோள் விழா

பிரணவப் பொருளாகிய விநாயகப்பெருமானை ஓங்காரரூபன் என்று அழைப்பர்.

அநாதியாய் என்றுமுள்ள பொருள் ஐந்து. இறைவன்-சக்தி - ஆணவம் - மாயை - ஆன்மா என்பன அவை. 'சிவாய நம' என்றபஞ்சாட்சரத்திலுள்ள ஐந்தெழுத்தும் அந்த ஐந்தையும் குறிக்கும்.

ஓம் என்ற பிரணவம் சூக்கும பஞ்சாட்சரம். சிவாயநம என்பது தூல பஞ்சாட்சரம்.

நித்தியப் பொருள் ஐந்தும் ஐந்தெழுத்திலும், ஐந்தெழுத்தும் சூக்குமமாகிய பிரணவத்திலும் அமையும்.

எனவே பிரணவ வடிவினராம் பிள்ளையார் ஐந்து முகத்தோடு தூலமாகவும் ஒரு முகத்

இன்று புதன்கிழமை சதுர்த்தித் திதியில் வரும் சுபநேரத்தில் ஆலய முன்றலில் பஞ்சமுக விநாயகர் விக்கிரகம் வடித்தலுக்கான கால்கோள் விழா நடைபெறுகிறது.

தோடு சூக்குமமாகவும் அடியவர்க்கு அருள் புரிய முன்வருகின்றார் என்று அறியலாம்.

ஒருவித்தினுள்ளே சூக்குமமாய் அடங்கியிருக்கும் ஒரு விருட்சத்தை நாம் கண்டு உணர்வதும் மிக்க சிரமம். தூலமான மரத்தைக் கண்டுணர்வது மிக எளிது. அவ்வாறே சூக்கும ரூபமான ஒருமுகவிநாயகரை நாம் பார்த்து அவர் பெருமையை உணர்வது எளிதன்று. தூல வடிவமான பஞ்சமுக விநாயகரைத் தரிசிப்பதால் அவர் பெருமையை உணர்வது எளிது.

தூலலிங்கமான கோபுரத்தைத் தரிசிப்பது மூலலிங்கமான சூக்கும லிங்கத்தைத் தரிசிப்பதிலும் எளிதாயிருப்பது மன்றி இறைவன் பெருமையையும் எளிதில் உணரவைக்கின்றதல்லவா?

அதுபோல பஞ்சமுக விநாயகர் படிமத்தை நாம் உருவாக்கி வழிபடுவது, வழிபாட்டு முறையில் இலகுவில் இறைவன் பெருமையை நாம் எண்ணி ஏத்தி இறைஞ்ச நல்ல சாதனமாகிறது.

ஈசானம், தற்புருஷம், அகோரம், வாமதேவம், சத்தியோசாதம் என்னும் பஞ்சபிரம மந்திரங்களே பரமேஸ்வரத்தின் ஐந்து திருமுகங்களாகும்.

சிவபிரானும் விநாயகப்பெருமானும் வேறு வேறல்லர். ஒருவரே என்று மெய்யுணர்ந்தார் கூறியுள்ளனர். எனவே ஐந்து திருமுகமுடைய சதாசிவ மூர்த்தியே அருவுருவமாகிய சிவலிங்க வடிவில் சூக்குமமாக இருப்பதுபோலவே,இயல்பாக ஐந்து திருமுகமுடைய விநாயகரே சூக்குமமாக ஒரு திருமுகத்தோடு அமர்ந்தருளுகின்றார் என்ற உண்மையை உணரலாம்.

பரமேஸ்வரன் ஆன்மாக்களுக்கு அருள் புரியும் கருணையே திருவுருவாகக்கொண்டு தடத்த நிலையில் வெளிப்பட்டு ஐந்தொழில் ஆற்றி நிற்கின்றார். இது வேதாகமங்களாகிய மெய்ஞ்ஞான நூல்களின் துணிபு. இவ்வகையில் சிவபெருமானுக்கு இருபத்தைந்து மூர்த்தங்கள் சொல்லப்படுகின்றன.

அதுபோல காணபத்தியமென்னும் சமயத்துக்குரிய ஆகமங்களிலே விநாயகருக்கும் பல மூர்த்தி பேதங்களும் தோற்றங்களும் கூறப்பட்டுள்ளன. அவற்றுள் பஞ்சமுக விநாயகர் என்ற மூர்த்தம் சிவபெருமானுடைய நடராஜ மூர்த்தம்போலச் சிறப்புடையதாகும்.

மிகப் பழைமையும் பெருமையும் திருவருட்பொலிவும் நிறைந்த மானிப்பாய் மருதடி விநாயகர் ஆலயத்திலும் பஞ்சமுக விநாயகர் திருவுரு அமைக்க வேண்டுமென்று அடியவர் உள்ளங்களில் ஒரு தூண்டுதலை அந்த விக்கினேஸ்வரர் உண்டாககினார். அதன் பயனாக மானிப்பாய் வாழ் சைவப் பெருமக்களின் ஒத்துழைப்புடன் இந்த ஆலய அறங்காவலர் குழுவினர், பிள்ளையார் சந்நிதியிலேயே அப்பெருமானுக்குகந்த சதுர்த்தி விரத நாளிலே பஞ்சமுக விநாயகர் திருவுருவை கருவிலே வார்த்தெடுக்க எல்லா ஆயத்தங்களும் செய்துள்ளார்கள்

# இராமன் படை எடுத்துவர சீதை சிறை மீள்கிறாள்

## கம்பன் தமிழ்க் கோட்டம் கால்கோள் விழாவில் துணைவேந்தர் வித்தி

யாழ்ப்பாணம், பெப்12

கம்பராமாயண காதை பெரும் பகுதி இலங்கையில் நடக்கிறது. நல்லாள் சீதை இலங்கையில்தான் சிறை வைக்கப்படுகிறாள்.

இராமரும் சகோதரரும் படையெடுத்து இலங்கை வருகிறார்கள். போரில் வென்று சீதையைச் சிறைமீட்கிறார்கள். விடிவு ஏற்படுகிறது. இதுவே கம்பராமாயணச் செய்தி.

நல்லூரில் கம்பன் தமிழ்க்கோட்டம் கால்கோள் விழாவில் தலைமையுரை நிகழ்த்திய யாழ் பல்கலைக் கழகத் துணை வேந்தர் திரு. சு. வித்தியானந்தன் இவ்வாறு கூறினார்.

நல்லை ஆதீன தர்மகர்த்தா ஸ்ரீலஸ்ரீ ஞானசம்பந்த தேசிகபரமாச்சாரிய சுவாமிகள் ஆசியுரை வழங்கினர்.

இலங்கைக் கம்பன் கழகத் தலைவர் திரு. இ. ஜெயராஜ் வரவேற்புரை நிகழ்த்தினார்.

அவர் தனது வரவேற்புரையில் பின்வருமாறு கூறினார்:-

இளைஞர்களாகிய எம்மை முதல் கவர்ந்தவர் பாரதியார். அவர் அறிமுகம் செய்து வைத்தார் கம்பனை. அவர் மூலம் கம்பனைச் சார்ந்தோம்.

கம்பன் கழகத்துக்குக் காணி நிலம் கிடைத்து விட்டது. அக்காணியில் தூணில் அழகியதாய், துய்ய நிறத்தினதாய் நன்மாடம் கட்டித் தர வேண்டும். அதற்குத் தமிழ்ப்பெருங்குடி மக்களின் ஆதரவு தேவை.

இவ்வாறு அவர் கூறினார்.

ஈழநாடு ஆசிரியர் திரு. என். சபாரத்தினம் தனது தொடக்க உரையில் கூறியதாவது:-

இலங்கு நூல் கல்லாதவர்கள் விலங்குகள் என்று வள்ளுவன் சொன்னான்- கம்பராமாயணம் நல்ல. நூல் அதைக் கற்க, ருசிக்க வாய்ப்புக்கள் பெருக வேண்டும்.

மல்லிகை ஆசிரியர் திரு. டொமினிக் ஜீவா பேசுகையில் நோய் வாய்ப்பட்ட உள்ளூர் கவிஞர் ஐயாத்துரைக்கு விழாவெடுத்த கம்பன் கழக இளைஞர்களுக்கு விரிந்த உள்ளம் உண்டு கம்ப நெஞ்சம் உண்டு என்றார்.

அமிர்த கங்கை ஆசிரியர் செம்பியன் செல்வன் பேசுகையில் யாழ்ப்பாணத்தில் இன்று இலக்கியத்தில் பல்வேறு ரீதியில் மறுமலர்ச்சி ஏற்படுகிறது. இளைஞர்கள் வண்ண வண்ண எண்ணங்களை விரித்துக் கொண்டிருக்கிறார்கள். என்றார்.

பேராசிரியர் அ. சண்முகதாஸ், விரிவுரையாளர் எஸ். சிவலிங்கராசா, கலாநிதி. மௌனகுரு, யாழ் பல்கலைக்கழகப் பதிவாளர் திரு. வி.என் சிவராஜா, செல்வி புஷ்பா செல்வநாயகம், யாழ் மாநகர ஆணையாளர் திரு. சி. வி. கே சிவஞானம் உட்பட பலரும் பேசினர்.

கம்பன் கழகச் செயலாளர் திரு. எஸ். குமாரதாசன் நன்றியுரை கூறினார்.

### கிளிநொச்சியில் இன்று மாநாடு

கிளிநொச்சி, பெப்.12

கிளிநொச்சி மாவட்ட உயர் அதிகாரிகள் சகலரையும் உள்ளடக்கிய சந்திப்பு ஒன்று இன்று 12 ஆம் திகதி கிளிநொச்சி இராணுவ இணைப்பதிகாரியின் அலுவலகத்தில் நடைபெறும்

இதற்கான அழைப்பை கிளிநொச்சி மாவட்ட இராணுவ இணைப்பதிகாரி கேர்ணல் கொப்பேகடுவ கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திரு. என். ஜயநாதன் ஊடாக அனுப்பி வைத்துள்ளார்.

### உதயனின் வார இதழ் சஞ்சீவி

### பருத்தித்துறையில் இன்னும் வழமை நிலை இல்லை

பருத்தித்துறை, பெப்.12

பருத்தித்துறையில் கடந்த புதன்கிழமை நடைபெற்ற சம்பவங்களைத் தொடர்ந்து நகரம் வெறிச்சோடிக் கிடக்கிறது.

மரக்கறி, மீன் சந்தைகள் நடமாடும் விற்பனை நிலையங்கள் என்பன தும்பளை வீதியான சிவன் கோயில் வடக்கு வீதி, மருதடி ஆகிய இடங்களில் இயங்கி வருகின்றன.

இவையும் நண்பகலுடன் ஓய்ந்து விடுகின்றன.

புதன்கிழமை நடைபெற்ற சம்பவங்களைத் தொடர்ந்து நகரில் வசித்து வந்த மக்களில் பலர் தமது மூட்டை முடிச்சுக்களுடன் அயல் கிராமங்களுக்குச் சென்றுள்ளனர்.

இ. போ. ச. பஸ், மினி பஸ் சேவைகளும் டிப்போவுக்கு அருகில், மருதடியிலிருந்தே ஆரம்பிக்கப்பட்டு வருகின்றன.

### எம். பிக்கு சூடு; அறிக்கை கோருகிறார் ஜனாதிபதி

கொழும்பு, பெப். 12

மஹர எம். பி. திரு கமலவர்ண ஜெயக்கொடி துப்பாக்கிச் சூட்டில் காயமடைந்த சம்பவம் குறித்து ஜனாதிபதி அறிக்கை கோரியுள்ளார்

அறிக்கையைத் தயாரிப்பதற்காக நேற்று பொலீஸார். காயமடைந்த எம். பி. திரு. கமலவர்ண ஜெயக்கொடியின் வாக்குமூலத்தைப் பெற ஆபஸ்த்திரிக்குச் சென்றனர்.

வாக்குமூலம் அளிக்கக் கூடிய நிலையில் திரு. ஜெயக்கொடி இல்லை என்று வைத்திய அதிகாரிகள் கூறியதைத் தொடர்ந்து பொலீஸார் திரும்பிவிட்டனர்.

## வலது குறைந்த மாணவருக்கு சேவை செய்வதில் ஈடுபாடு

### முன்னாள் நீதியரசருக்கு புகழஞ்சலி

யாழ்ப்பாணம், பெப் 12

வலது குறைந்த மாணவர்களின் சேவையில் ஈடுபட்டவர் காலஞ்சென்ற முன்னாள் நீதியரசர் வீ. சிவசுப்பிரமணியம்.

வலது குறைந்த மாணவர் நலனில் ஈடுபாடு காட்டுவது மூலம் நாம் அவருக்குக் கைமாறு செய்ய வேண்டும்.

நாவலர் கலாசார மண்டபத்தில் நடந்த [illegible] சிவசுப்பிரமணியத்தின் நினைவு அஞ்சலிக் கூட்டத்தில் உரையாற்றிய பேராசிரியர் கு நேசையா இவ்வாறு குறிப்பிட்டார்.

யாழ் பல்கலைக் கழகத் துணைவேந்தர் திரு. சு. வித்தியானந்தன் வைபவத்துக்குத் தலைமைவகித்தார்.

ஈழநாடு ஆசிரியர் திரு. என். சபாரத்தினம், புலவர் சிவபாதசுந்தரனார் ஆகியோரும் உரையாற்றினர்.

அமரர் சிவசுப்பிரமணியம் [illegible] அபிவிருத்தி சம்பந்தமாக [illegible] அறிக்கையின் மொழிபெயர்ப்பை நினைவுமலராக பனம் பொருள் அபிவிருத்திச்சபை வெளியிட்டு உள்ளது.

இந்த நினைவு மலரை பனம் பொருள் அபிவிருத்தி சபைத் தலைவர் திரு எஸ். நடராசா வைபவத்தில் வெளியிட்டு வைத்தார்.

முதல் பிரதியை யாழ் மாநகரசபை ஆணையாளர் திரு. எஸ். வி. கே. சிவஞானம் பெற்றுக் கொண்டார்.

நினைவு அஞ்சலிக் கூட்டத்தை ஒழுங்கு செய்த ஆறுமுகநாவலர் சபை இணைச் செயலாளர் திரு. என். சோமகாந்தன் நன்றி கூறினார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

பூச்சாடிகள் Floor Tiles
கிறில் (நவீன டிசைன்கள்)
உங்கள் ரசனைக்கேற்றவாறு
தெரிவுசெய்து கொள்ளுங்கள்!
M.T SOMASUNDARAM & SONS
Ceylon Tiles Merchants
199, Power House Road, JAFFNA.
Telegram: 'PATHUGADEVI' Phone: 23845

# உதயன்

12. 02. 1986

கூரை ஓடுகள்
மான் மார்க் தேனீ மார்க்
புலி மார்க் நாருனி மார்க்
செவன ஓடுகள்
M. T. சோமசுந்தரம்
& சன்ஸ்
199, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
தந்தி: 'பாதுகாதேவி' தொலைபேசி: 23845

# மலையகத்தில் சிங்கள மக்களை காப்பாற்றுக

## மல்வத்தை, அஸ்கிரிய மகாநாயக்க தேரர்கள் ஜனாதிபதியிடம் கோரிக்கை

கொழும்பு, பெப். 12
சிங்கள மக்களைக் காப்பாற்ற மலையகத்தில்பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்துங்கள் என்று ஜனாதிபதிக்கு வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

மல்வத்தை மகாநாயக்க தேரர் சிறிமல்வத்தை ஆனந்த, அஸ்கிரிய மகாநாயக்க தேரர் பலிபான சந்தானந்த, தியவதன நிலமே நிரஞ்சன் விஜயரத்ன ஆகியோரே இவ்வேண்டுகோளைக் கூட்டாக விடுத்துள்ளனர்.

இது சம்பந்தமாக அவர்கள் அனுப்பிய மகஜரில் கூறப்பட்டுள்ளதாவது:

மலையகத் தமிழருக்குக் குடியுரிமை வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

அது சம்பந்தமான சட்டமூலம் நாடாளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படுவதற்கு முன்னர் மலையகத்தில் வன்செயல்கள் தொடங்கிவிட்டன.

இவ்வன்செயல்கள் திடீர் என்று வெடித்தன என்று சொல்லமுடியாது.

முன்கூட்டியே திட்டமிடப்பட்ட ஒரு நடவடிக்கையின் உச்சம்தான் இந்த வன்செயல்கள்.

பொது அலுவலகங்கள் ரயில் நிலையங்கள், பொலீஸ் நிலையங்கள் கூட காரணமின்றித் தாக்கப்பட்டன. அரச போக்குவரத்துச் சேவை ஸ்தம்பித்தது. பொது நிர்வாகம் முடங்கிவிட்டது.

தோட்டப்பகுதி கிராமங்களில் வாழ்ந்துவந்த சிங்கள மக்கள் வீடுவாசல்களை விட்டு உயிரையும் குழந்தைகளையும் காப்பாற்ற அகதிகளாக வெளியேற வேண்டியதாயிற்று.

சிவனொளிபாதமலைக்கு சென்ற பௌத்தயாத்திரிகர்கள்கூட தடுக்கப்பட்டனர்.

தீவிரவாதிகளின் தாக்குதல்களால் அகதிகளாகி வடக்கு, கிழக்கு மாகாணங்களில் இருந்து வந்த சிங்கள அகதிகளுடன் இப்போது மலையக சிங்களவர்களும் சேர்ந்துள்ளனர்.

பாதிக்கப்பட்டுள்ள சிங்கள மக்களைக் காப்பாற்ற மலையகத்தில் பாதுகாப்பு நடவடிக்கைகளைப் பலப்படுத்தவேண்டும்.

இப்படி மகஜரில் கூறப்பட்டுள்ளது.

### வவுனியாவில் பாடசாலை கட்டட திறப்பு விழா

சாவகச்சேரி, பெப், 12
வவுனியா சைவப்பிரகாச வித்தியாலய கட்டடத் திறப்பு விழா இன்று புதன்கிழமை காலை பத்து மணிக்கு நடைபெற இருக்கிறது.

உதவி அரசாங்கஅதிபர் திரு. கே. ஐயம்பிள்ளை, வட்டாரக்கல்வி அதிகாரி திரு. வே. க. நாகராசா ஆகிய இருவரும் மங்கள தீபம் ஏற்றி விழாவை ஆரம்பித்து வைப்பார்கள்.

மாவட்ட கல்விப்பணிப்பாளர் திரு. வெ. சபாநாயகம் நூல்நிலையத்தை யும், வவுனியா அரசாங்க அதிபர் திரு. கே. சி. லோகேஸ்வரன் விஞ்ஞான ஆய்வுகூடத்தையும், திட்டப்பணிப்பாளர் திரு. த லங்காநேசன் ஆசிரியர் விடுதியையும் கல்விஅதிகாரி திரு பொ. சோமசுந்தரம் வகுப்பறை மண்டபத்தையும் திறந்து வைப்பார்கள்.

### பெற்றோலோ பெற்றோல்!

நல்லூர். பெப், 12
கல்வியங்காடு பெற்றோல் நிலையத்தில் நேற்று 900 லீட்டர் பெற்றோல் கட்டுப்பாட்டு விலைக்கு விற்கப்பட்டது.

இதனைப் பெறுவதற்கு நேற்று வாகனங்கள் நீண்ட கியூவில் காணப்பட்டன.

### மின்கம்பம் முறிந்து சிறுமி மரணமானார்

நல்லூர்,பெப்.12
மின்கம்பம் ஒன்று முறிந்து வீழ்ந்ததால் நான்கு வயதுச் சிறுமி மரணமானார்.

சிவனம்மாள் கோயிலடியைச் சேர்ந்த கமலநாதன் சைதன்யா என்ற சிறுமியே மரணமானவர் ஆவார்.

இச்சம்பவம் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடந்தது.

சம்பவதினம் வேறு சிறுவர்களுடன்,இச்சிறுமி வீதியில் விளையாடிக் கொண்டிருந்தாராம்.

அப்பொழுது உக்கிய நிலையில் இருந்த சிமெந்து மின்கம்பம் திடீரென முறிந்து சிறுமியின் மேல் விழுந்தது.

சிறுமிக்கு காலிலும், கையிலும் பலத்த காயம் ஏற்பட்டது.

ஆஸ்பத்திரியில் சேர்க்கப்பட்ட பின்னர் அவர் காலமானார்.

### ரூபவாஹினியில் நெஞ்சிருக்கும் வரை

இன்றிரவு 9.50 க்கு ரூபவாஹினியில் 'நெஞ்சிருக்கும் வரை' ஒளிபரப்பாகிறது.

இந்த தமிழ்ப் படத்தில் சிவாஜி கணேசன், முத்துராமன், கே. ஆர். விஜயா ஆகியோர் நடிக்கிறார்கள்.

## விளையாட்டரங்கு

# சென் ஜோன்ஸ்--- பமிலியன்ஸ் சாம்பியன்

யாழ்ப்பாணம், பெப். 12
நேற்று நடைபெற்ற கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் சென் ஜோன்ஸ் கல்லூரி வெற்றி பெற்று சாம்பியனாக தெரிவு செய்யப்பட்டது.

யாழ்ப்பாணம் வை. எம். சி ஏ நடத்திய கூடைப்பந்தாட்டசுற்றுப் போட்டியின் இறுதிப் போட்டியே நேற்று நடைபெற்றது.

சென் ஜோன்ஸ் கல்லூரி ஆடுகளத்தில் நடைபெற்ற இறுதிப் போட்டியில் சென் ஜோன்ஸ் அணி, யாழ். வை. எம். சி. ஏ. அணியை 36க்கு 26 என்ற புள்ளி அடிப்படையில் தோற்கடித்தது.

சென் ஜோன்ஸ் அணியின் சார்பில் பி. பார்த்திபன் அபாரமாக ஆடி 18 புள்ளிகளையும், பி. சிவசுதன் 10 புள்ளியையும் பெற்றனர்.

வை எம். சி. ஏ அணியின் சார்பில் எல். அருள்தாசன், எஸ். பி. தம்பு ஆகியோர் முறையே 10, 6 புள்ளிகளைப் பெற்றனர்.

மிகவும் விறுவிறுப்பாக நடைபெற்ற இந்த ஆட்டத்துக்கு டாக்டர் ரி. விஜயகமூர்த்தி, ஆர். வசந்தகுமார் ஆகியோர் நடுவர்களாக கடமையாற்றினர்.

### பமிலியன்ஸ்

இதற்கு முன்னர் நடைபெற்ற பெண்களுக்கான கூடைப்பந்தாட்ட இறுதிப் போட்டியில் யாழ்ப்பாணம் பமிலியன்ஸ் அணி சாம்பியனானது.

இந்த அணி யாழ் பல்கலைக்கழக அணியை 28-6 என்ற புள்ளி அடிப்படையில் தோற்கடித்தது.

பமிலியன்ஸ் அணியின் சார்பில் ரி. துளசி திறமையாக ஆடி 20 புள்ளிகளைப் பெற்றார்.

இப்போட்டியில் நடுவர்களாக திரு. ஜெ என். பொன்னையா, திரு. எல். அருள்தாசன் ஆகியோர் கடமையாற்றினர்.

இப்போட்டிகளில் வை. எம். சி. ஏ. இன் தலைவர் திரு பிரான்சிஸ் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு வெற்றி பெற்ற அணிகளுக்கு பரிசில்களை வழங்கினர்.

### ஈச்சமோட்டை வென்றது

யாழ்ப்பாணம், பெப். 12
கடந்த திங்கட்கிழமை நடைபெற்ற கரபந்தாட்டப் போட்டியில் ஈச்சமோட்டை விளையாட்டுக்கழகம் வெற்றியீட்டியது.

ஈச்சமோட்டை விளையாட்டுக்கழகம் அரியாலை கிழக்கு விளையாட்டுக் கழகத்தை 8 க்கு 15, 15 க்கு 10, 15 க்கு 12 என்ற புள்ளி அடிப்படையில் தோற்கடித்தது.

ஈச்சமோட்டை விளையாட்டுக்கழக மைதானத்தில் நடைபெற்ற இப்போட்டிக்கு கப்டன் டீ. ஏ. எம். குணசிங்கம் நடுவராக கடமையாற்றினார்.

தமிழர் தென் இந்தியாவுக்கு ஓடலாம்

# சிங்களவர்கள் கடலில் குதிக்கவேண்டி வரும்

## சிறிமாவோ கூறுகிறார்

கொழும்பு, பெப். 12
தமிழர் தென் இந்தியாவுக்கு ஓடலாம் சிங்களவர் கடலினுள் தான் குதிக்க வேண்டிவரும்.

இப்படி சுதந்திரக் கட்சி தலைவி திருமதி. சிறிமாவோ பண்டாரநாயக்கா சொன்னார்.

ஹங்குரான்கெத்த என்ற இடத்தில் நடந்த கூட்டத்தில் திருமதி. பண்டாரநாயக்கா பேசினார்.

திருமதி. பண்டாரநாயக்கா மேலும் சொன்னதாவது;

இன்று வடக்கு-கிழக்கில் தீவிரவாதிகளின் ஆட்சிதான் நடக்கிறது.

இந்த ஆண்டு முடிவில் பொதுத்தேர்தல் நடத்தப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. தேர்தல் ஒன்றை நடத்த அரசை நிர்ப்பந்திப்பதே சுதந்திரக் கட்சியின் நோக்கம்.

இப்படி திருமதி. பண்டாரநாயக்கா சொன்னார்.

### கடத்தப்பட்டோரை விடுவிக்குமாறு

#### வர்த்தகர் சங்கம் கோரிக்கை

யாழ்ப்பாணம், பெப்.12
பெப்ரவரி 7 ஆம் திகதி கடத்தப்பட்ட 2 வர்த்தகர்களையும் மனிதாபிமான அடிப்படையில் விடுவிக்கும்படி யாழ் வர்த்தகர் சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

யாழ் ஸ்ரான்லி வீதியில் மோட்டார் உதிரிப்பாகங்கள் விற்பனையில் ஈடுபட்டுள்ள சுப்பையா சிவகடாட்சம், செல்லப்பா சிறிஸ்காந்தன் ஆகிய இருவருமே கடத்தப்பட்டவர்கள்.

சுகயீனம் காரணமாக அவஸ்தைப்படும் இருவரையும் விடுதலை செய்வதுடன் பிரச்சினைகளை சுமுகமாகத் தீர்த்துக் கொள்ளும்படியும் சம்பந்தப்பட்டவர்களுக்கு யாழ் வர்த்தக சங்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது

### களஞ்சியம் உடைத்து திருட்டு

சுண்டுக்குளி, பெப். 12
யாழ் நகரிலுள்ள வர்த்தக நிலையம் ஒன்றுக்குச் சொந்தமான களஞ்சியத்தில் இருந்து பொருள்கள் கொள்ளை அடிக்கப்பட்டுள்ளன.

கடந்த திங்கட்கிழமை இரவு இச்சம்பவம் நடந்தது.

பிரப்பங்குளம் ஒழுங்கையிலுள்ள களஞ்சிய வாயிலை உடைத்து உட்புகுந்த திருடர்கள் மினிவான் ஒன்றையும் 10,000 ரூபா பெறுமதியான லொறி உதிரிப்பாகங்களையும் எடுத்துச் சென்றனர்.

**புனித இயக்கங்களுக்கு**
**ஓர் உருக்கமான வேண்டுகோள்**

10 - 2 - 86 ஆம் திகதி திங்கட்கிழமை இரவு பிரப்பங்குளம் வீதியில் T. G. இன்டஸ்ரீஸ் கட்டடத்தில் உள்ள எமது களஞ்சியசாலையிலிருந்து எமது 30 சிறி 1094 இலக்க ரோசா மினிபஸ்ஸை இனந்தெரியாதவர்கள் கடத்திவிட்டனர். இதனைப் புனித இயக்கங்கள் மீட்டுத் தருமாறு தயவாகக் கேட்டுக்கொள்கிறோம்.

நா. சண்முகம்
ஸ்ரீகௌரி றேடர்ஸ்
536, கே. கே. எஸ். வீதி,
யாழ்ப்பாணம்.

கையெழுத்து இயக்கம்

# மக்கள் கோரிக்கைகள் தெளிவுற இருக்க வேண்டும்

## என அறிக்கையில் வலியுறுத்து

யாழ்ப்பாணம்,பெப்.12
ஜனாதிபதிக்கு மக்கள் கையெழுத்திட்டு சமர்ப்பிக்கும் கோரிக்கைகள் யாவும் சந்தேகத்துக்கு இடமின்றி மாற்று விளக்கத்துக்கு இடமளியாத முறையில் அமைய வேண்டும்.

யாழ் பிரஜைகள் குழுக்களின் இணைப்புக் குழுக்கூட்டம் நல்லூர் யாத்திரிகர் விடுதியில் தலைவர் பேராசிரியர் கா சிவத்தம்பி தலைமையில் நேற்று நடைபெற்றது.

கூட்ட முடிவில் பேராசிரியர் கா சிவத்தம்பி விடுத்த அறிக்கையில் மேற்கண்டவாறு குறிப்பிடப்பட்டு உள்ளது.

அறிக்கையில் தெரிவிக்கப்பட்டிருப்பதாவது:-

இன்றைய கூட்டத்தில் இருபத்தைந்துக்கும்மேற்பட்ட பிரஜைகள் குழுக்களின் பிரதிநிதிகள் கலந்து கொண்டனர்.

அவர்கள் தாம் சேகரித்துக் கொண்ட கையெழுத்து படிவங்களைக் கையளித்ததுடன் புதிய படிவங்களைப் பெற்றுக் கொண்டனர்.

இக்கையெழுத்து இயக்க நடைமுறைகள் பற்றிய கலந்துரையாடல் நடந்தபோது மக்கள் கோரிக்கைகள்தெளிவாக அமைய வேண்டும் என்று தீர்மானிக்கப்பட்டது.

கையெழுத்து இயக்கம் தோன்றிய பின்னர் நாட்டில் ஏற்பட்டுள்ள முக்கிய அரசியல் நிகழ்வுகளின் தாக்கங்களை உள்ளடக்கியதாக மக்கள் கோரிக்கைகள் அமைய வேண்டும் என்றும் தீர்மானிக்கப்பட்டது.

கையெழுத்துப் படிவங்களுடன் தெளிவான விளக்கங்களையும் இணைப்பதெனவும் தீர்மானிக்கப்பட்டது.

இத்தீர்மான விளக்கங்களை ஆராய இக்குழுக் கூட்டம் எதிர்வரும் 26-ஆம் திகதி புதன் கிழமை பிற்பகல் நடைபெறும்.

கையெழுத்து இயக்க நிறைவு நிகழ்ச்சி மார்ச் முதலாம் திகதி சனிக்கிழமை காலை நடைபெறும்.

இவ்வாறு அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மட்டக்களப்பு பிரஜைகள் குழு நேற்று நீலனைச் சந்தித்தது

மட்டக்களப்பு. பெப்,12
மட்டக்களப்பு மாவட்டத்தில் தமிழர்கள் படும் இன்னல்கள் குறித்து தமிழர் விடுதலைக்கூட்டணிப் பிரமுகர் டாக்டர் நீலன் திருச்செல்வத்திடம் மட்டக்களப்பு பிரஜைகள் குழு நேற்று எடுத்துரைத்தது.

பிரஜைகள் குழுவிற்கு அதன் தலைவர் திரு. கே. தங்கவடிவேல் தலைமை வகித்தார்.

மண்டூர், இருதயபுரம் பகுதியில் ஒரு நாளில் 24 அப்பாவித் தமிழர் சுட்டுக் கொல்லப்பட்டனர்.

பின்னர் பயங்கரவாதிகள் சுட்டுக்கொல்லப்பட்டனர் என்று அரச பொதுசன தொடர்பு சாதனங்கள் அறிவித்தன.

கண்டபடி தமிழர் கைது செய்யப்படுகின்றனர். விசாரணை என்ற பெயரில் தமிழ் இளம் பெண்கள் மானபங்கப் படுத்தப்படுகின்றனர்.

இந்த அக்கிரமச் செயல்களுக்கு முடிவே இல்லையா? யுத்தநிறுத்தம் கண்டிப்பாகக் கடைப்பிடிக்கப்பட வேண்டும்.

கைதானவர்கள் பற்றி பிரஜைகள் குழுவுக்கு அறிவிக்கப்படுவது இல்லை குழுவுக்கும் இணைப்பு அதிகாரிக்கும் இடையே யான உறவு சீராக இல்லை - இப்படி பிரஜைகள் குழுத் தூதுக் கோஷ்டி டாக்டர் திருச்செல்வத்திடம் எடுத்துரைத்தது.

இலங்கையில் வாழும் தமிழர்களின் நிலையே இதுதான் என்று கூறிய டாக்டர் திருச்செல்வம் [illegible] கஷ்டங்களை உரிய இடத்[illegible]களுக்கு எடுத்துச் சொல்வதாகப் பதிலளித்தார்.

### சீக்கிய பிரமுகர் சுட்டுக்கொலை

புதுடில்லி, பெப். 11
பஞ்சாப் மாநிலத்தைச் சேர்ந்த அகாலிதள் கட்சியின் மிதவாதப் பிரமுகரான தளித்சிங் இன்று சுட்டுக் கொல்லப்பட்டார்.

இது ஒரு வாரத்தில் நடந்த மூன்றாவது அரசியல் கொலையாகும்.

அமிர்தசரஸில் உள்ள பொற்கோயிலை புனரமைக்கும் நிர்வாக சபையில் திரு. தளித் சிங் ஒரு நிர்வாக அங்கத்தவர்.

### ஊரெழுவில் மகோற்சவம்

யாழ்ப்பாணம், பெப். 12
ஊரெழு ஸ்ரீ வீரகத்தி விநாயகர் கோயில் வருடாந்த மகோற்சவம் நாளை வியாழக்கிழமை ஆரம்பமாகிறது.

தேர்த்திருவிழா பெப்ரவரி 22இலும் தீர்த்தம்23 இலும் நடைபெறும்.

பூங்காவனத் திருவிழா பெப்ரவரி 25 இல் நடைபெறும்

### தாய்மார் . . .

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

பாட்டின் பிரகாரம், மொத்தம் 26 தாய்மாருக்கு தமது புதல்வர்களை பார்க்கக் கடிதம் வழங்கப்பட்டிருந்தது.

எனினும் 16 தாய்மாரே தமது புதல்வர்களை உயிராபத்து எதுவும் இல்லாமல் இருக்கிறார்களா என்பதை பார்ப்பதற்கு நேற்று முகாம்களுக்குச் சென்றனர் என அறிவிக்கப்பட்டது.

### நாவற்குழி . . .

(1-ஆம் பக்கத் தொடர்ச்சி)

மறைந்திருந்தும் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர்.

போராளிகள் தொடர்ந்தும் கைக்குண்டுகளை வெடிக்க வைத்துக் கொண்டிருந்தனர். சிருடையினர் பின்பு முகாமுக்கு திரும்பிவிட்டதாகத் தெரிவிக்கப்படுகிறது. [illegible] நேரமாக இக் குண்டு வெடிப்புச் சத்தங்கள் கேட்ட வண்ணம் இருந்தன.

இதனால் நேற்று இவ்வீதியூடாக எந்த வாகனமும் போக்கு வரத்துச் செய்யவில்லை.

### அமெரிக்க நிறுவன வாகன கடத்தல்

கொழும்பு,பெப் 12
மன்னாரில் நிர்மாண வேலைகளில் ஈடுபடும் இரண்டு அமெரிக்க நிறுவனங்களுக்குச் சொந்தமான இரண்டு வாகனங்கள் நேற்று இனந்தெரியாதோரால் கடத்தப்பட்டன என்று கூறப்படுகிறது.

இவற்றில் பின்னர் ஒரு வாகனம் பாதுகாப்புப் படையினரால் மீட்கப்பட்டதாகக் கூறப்படுகிறது.

### உன்னிச்சையில் ஸ்ரோர் கூரை அகற்றப்பட்டது

கொழும்பு, பெப். 12
உன்னிச்சையில் நெல் சந்தைப்படுத்தும் சபை ஸ்ரோரின் கூரைகள் இனந் தெரியாதோரால் அகற்றிச் செல்லப்பட்டன.

அதே நேரத்தில் மரக்கறியுடன் வந்த கண்டி லொறி ஒன்று இனந் தெரியாதோரால் வழிமறிக்கப்பட்டு 1,500 ரூபா பணம், மரக்கறி முதலியன கொள்ளை இடப்பட்டன.

இரண்டு சம்பவங்களும் நேற்று இரவு இடம்பெற்றன.

**அறிவித்தல்**

ஊர்காவற்றுறை மாவட்ட நீதிமன்றத்தின் நம்பிக்கைச் சொத்து 10 ஆம் இலக்க வழக்கின் (TR | 10) பிரகாரம் அமுல்படுத்தப்பட்டுள்ள நயினாதீவு ஸ்ரீ நாகபூஷணி அம்மன் கோயில் புதிய முகாமைத் திட்டத்தின் கீழ் வழிபடுநர் சபையை அமைத்தலும் அறங்காவலரைத் தெரிவு செய்தலும்.

2. 2. 1986 ஆம் திகதி பத்திரிகை விளம்பரத்தின்படி புதிய அறங்காவலர் பதவிக்கு வேட்பாளராக விண்ணப்பித்தவர்கள் விபரம் பின்வருமாறு:-

| | பெயர். | வாக்காளர் இலக்கம். |
|---|---|---|
| 1. | திரு முத்தையா இராமலிங்கம் | 237. |
| 2. | திரு. நாகலிங்கம் கந்தசாமி | 46. |
| 3. | திரு. வைத்திலிங்கம்கணபதிப்பிள்ளை | 222. |
| 4. | திரு. நா. கணபதிப்பிள்ளை குமாரசூரியர் | 274. |
| 5. | திரு. தம்பையா குலசேகரம் | 54. |
| 6. | திருமதி. மகாதேவன் சிவகாமி | 280. |
| 7. | திரு. நாகேசு சிவராசசிங்கம் | 168: |
| 8 | திரு. சின்னத்தம்பி தனபாலசிங்கம் | 151. |
| 9. | திரு. தியாகர் திருநாவுக்கரசு | 44. |
| 10. | திரு. மு. சங்கரப்பிள்ளை திருநாவுக்கரசு | 286. |
| 11. | திருமதி விசுவலிங்கம் தையலம்மை | 307. |
| 12. | திரு. கந்தசாமி பரமலிங்கம் | 241. |
| 13. | திரு. கணபதிப்பிள்ளை பொன்னையா | 51. |
| 14. | திரு. சி. நாகமுத்து மதியாபரணம் | 31. |
| 15. | திரு. கு. வைத்திலிங்கம் முத்தையா | 03. |
| 16. | திரு முருகேசு நவரத்தினம் | 06. |
| 17. | திரு நடராசா விஸ்வநாதன் | 146. |

இவர்களுக்கு எதிராக ஏதும் ஆட்சேபனை இருப்பின், 14-2-1986 ஆம் திகதி பிற்பகல் 4-00 மணிக்குமுன் எனக்குக் கிடைக்கக்கூடியதாக எழுத்து மூலம் அறியத்தரவும்.

உதவி அரசாங்க அதிபர் பணிமனை
வேலணை, 11-2-1986

மைதிலி சோமசுந்தரம்
உதவி அரசாங்க அதிபரும்,
புதிய முகாமைத் திட்டத்தின் கீழ் வழிபடுநர்சபை
அமைக்க தகுதி வாய்ந்த உத்தியோகத்தரும்.

அச்சிடுவோரும் வெளியிடுவோரும்: த ஷப்ரு உமா எக்ஸ்போட்ஸ் லிமிட்டெட், 207, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம். அச்சகம்: 15, 2 ஆம் ஒழுங்கை, மின்சார நிலைய வீதி, யாழ்ப்பாணம்.
வெளியிட்ட திகதி 12 . 2 . 1986

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org